மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 2 /2025**

வா.சா. 1 பாண்டியராஜன், S/o. கிருஷ்ணமூர்த்தி
நாள்: 10.06.2026
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**<u>1, 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) பெருமா என்பவர் எழுதிக் கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் உரிமை உடைய நபர் எழுதிக் கொடுத்த காரணத்தினால் வழக்கில் நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கக் கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. பெருமா என்பவர் எழுதிக் கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் என்றும் அதை ரத்து செய்ய கேட்டு பரிகாரம் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கை நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அதனால் பட்டாவை பொருத்து நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

2) 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சங்கரன் என்பவரிடமிருந்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட பங்கினைப் பொறுத்து பாகம் பிரித்து கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய காரணத்தினால் தான் பொய்யான சங்கதிகளோடு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**(3 முதல் 6 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு